## <u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

**அசல் வழக்கு எண். 76/2022**

2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 07 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய ஜெய்சங்கர் **PW.1** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 07.11.2024

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | ஜெய்சங்கர் PW-1 | | |
| Father Name | : | ராமசாமி | Court | : |
| Village | : | அரும்பூர், குளிச்சார் வட்டம், மயிலாடுதுறை T.K. | Taluk | : |
| Calling | : | | Religion | : |
| Age | : | 59 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:-</u>

நான் இவ்வழக்கில் வாதியின் அதிகாரம் பெற்ற முகவர் மற்றும் வாதி தரப்பு 1 வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

16.08.2017 தேதியிட்ட கைலாசஅய்யர் பெயரில் உள்ள பட்டாவின் கணினி நகல் **வா.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18.10.2005 தேதியிட்ட மயிலாடுதுறை துணை வட்டாச்சியர் வழங்கிய கைலாசஅய்யர் பெயரில் உள்ள பட்டாவின் அசல் **வா.சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 26.03.1986 தேதியிட்ட வாதி காவேரி அவர்களுக்கு கைலாச அய்யர் எழுதிகொடுத்த கிரயஉடன்படிக்கை பத்திரத்தின் அசல் **வா.சா.ஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 02.03.2000 தேதியிட்ட வாய்தா ரசீது அசல் **வா.சா.ஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 13.04.2006 தேதியிட்ட வாய்தா ரசீது அசல் **வா.சா.ஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 07.02.2008 தேதியிட்ட வாய்தா ரசீது அசல் **வா.சா.ஆ 6**

ஆக குறியீடு செய்யப்படுகிறது. 27.03.2007 தேதியிட்ட வாய்தா ரசீது அசல் **வா.சா.ஆ 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்திற்கான புல வரைபடம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 28.08.2018 தேதியிட்ட வாய்தா ரசீது அசல் **வா.சா.ஆ 9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்யவேண்டி வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.